BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் கலைஞர்களுக்கான கோடைப்பருவ சந்தையில், உள்ளூர்க் கடைகளில் பொருட்கள் வாங்கி, ப்ராம்ப்ட்டன் நகர கலைச் சமூகத்தினரை ஆதரியுங்கள்

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 12, 2022) –ப்ராம்ப்ட்டன் நகர கலை சமூகத்தினருக்கான சந்தை துவக்க விழாவில் உள்ளூர் கலைஞர்களை ஆதரிக்கவும், அந்த சமூகத்தினருடன் இணையவும் ப்ராம்ப்ட்டன் நகர கலை, கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் தொழில் மேம்பாட்டு நிறுவனம் (ACCIDA), குடியிருப்பாளர்களை அழைக்கிறது. ஜூலை 16 ஆம் நாள், சனிக்கிழமை காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை, கலைஞர்களுக்கான கோடைப்பருவ சந்தையில் ப்ராம்ப்ட்டன் நகரின் கலைப்பொருள் விற்பனையாளர்கள் 25 பேரும் மற்றும் தி ரோஸ் ப்ராம்ப்ட்டனுக்குள் உள்ள உள்ளூர் கலை அமைப்புகளும் அடங்குவர்:

- 905இன்க்
- அபியோலா இடோவு
- அதிதி கனீவ் சங்க்வான்
- ஆன்னிமாரி க்ளாடெட் ஆர்ட்
- ஆர்ட் பை அனிதா பியெட்ராஸ்
- ஆர்ட் ஆன் மில் ஸ்ட்ரீட்
- ஆர்ட்டிஸன்வொர்க்ஸ்
- ப்ராம்ப்ட்டன் கில்டெர்'ஸ் கில்ட்
- ப்ராடனிங் ஹொரைஸான்ஸ்
- காலீனா ஜீன்
- எம்ம்ப்பெல்லிஷ்டு
- கேல்லரி 22 கலெக்ட்டிவ்
- ஹனீன் அர்ஷத்
- HJEM கோ
- ஜூலியா லூயிஸ் பெரெய்ரா
- லே ஸார்ஜ் க்ரியேஷன்ஸ்
- லக்ஸ் பை நோனி
- மீகன் லிம்
- மெலிஸ்ஸாஸ்.ஹாண்ட்மேட்ஸ்
- ரிக்கி லிமா
- சக்வா
- தி இன் ப்ரிண்ட் கலெக்ட்டிவ்
- தி பேப்பர் நார்வால்
- விக்கி ரூப்பிள் லெப்பே
- விஷுவல் ஆர்ட்ஸ் ப்ராம்ப்ட்டன்

**டிஜே** ரோஷானியின் இசையைக் நேரில் பார்த்துக் கேட்டு ரசிக்கும்போதே ஓவியங்கள், அச்சுப்பிரதிகள், செராமிக் பாண்டங்கள், ஆபரணங்கள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பரந்த அளவிலான உள்ளூர் கலைப்படைப்புகளை வாங்கிச் செல்லுங்கள். கோடைகால கலைஞர் சந்தையில் இருக்கும்போதே, காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை மெரிடியன் கிரெடிட் யூனியன் வழங்கும் ப்ராம்ப்ட்டன் உழவர்

சந்தையிலும் உலாவுங்கள்; இது வெலிங்டன் தெருவில் ஜார்ஜ் ஸ்ட்ரீட் மற்றும் மெயின் ஸ்ட்ரீட் சவுத் மற்றும் கேஜ் பார்க் இடையே அமைந்துள்ளது.

ACCIDA பற்றி மேலும் அறிய இங்கு வாருங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் பற்றிய முழு விவரங்களுக்கு இங்கு வாருங்கள்.

**டவுண்டவுன் ப்ராம்ப்ட்டனில் உருமாற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது**

டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் ஒரு உருமாற்றத்தை மேற்கொண்டு வருகிறது. அப்பகுதியில் உள்ள நீர் மற்றும் சுகாதார சாக்கடைகளை மாற்றும் திட்டத்தினை பீல் மண்டலம் நிர்வாகம் முன்னெடுத்துச் செல்கிறது. இதன் விளைவாக, பல இடங்களிலும் சாலைகள் அடைக்கப்பட்டுள்ளன. ஆகவே, கோடைப்பருவ கலைஞர் சந்தைக்குச் செல்லும்போது முன்கூட்டியே திட்டமிடுங்கள்.

நகராட்சி வாகன நிறுத்த இடங்கள் பற்றிய புது தகவல்களை brampton.ca இல் காணலாம் அல்லது ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து உங்களை அங்கு அழைத்துச் செல்ல அனுமதியுங்கள். Triplinx உபயோகித்து உங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிடுங்கள்.

**சந்தைச் சதுக்கத்தில் வாகன நிறுத்த வசதி**

சந்தைச் சதுக்க வாகன நிறுத்த வசதியில் பராமரிப்புப் பணிகளை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நிறைவு செய்ய இருக்கிறது; இதன் காரணமாக இது ஜூன் 27 முதல் ஜூலை 22, 2022 வரை தற்காலிகமாக மூடப்படும்

வருகையாளர்களுக்கும் வியாபாரிகளுக்கும் பின்வரும் நகராட்சி வாகன நிறுத்த வசதிகளில் வாகன நிறுத்த வசதி தொடர்ந்து கிடைத்துவரும்:

- ஜான் ஸ்ட்ரீட் வாகன நிறுத்த வசதி, 16 ஜான் ஸ்ட்ரீட்
- நகர் மன்ற வாகன நிறுத்த வசதி, 2 வெலிங்க்டன் ஸ்ட்ரீட் மேற்கு
- வெஸ்ட் ஸ்ட்ரீட் வாகன நிறுத்த வசதி, 41 ஜார்ஜ் ஸ்ட்ரீட்
- நெல்ஸன் சதுக்க வாகன நிறுத்த வசதி, 9 டிப்லாக் சந்து
- ஜார்ஜ் ஸ்ட்ரீட் வடக்கு சர்ஃபேஸ் வாகன நிறுத்த வசதி, 20 ஜார்ஜ் ஸ்ட்ரீட் வடக்கு

## ACCIDA பற்றி

கலை, கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் தொழில் மேம்பாட்டு நிறுவனம் என்பது ப்ராம்ப்ட்டன் நகரத்தின் கீழ் உருப்பெற்றுவருகின்ற ஒரு தனித்துவமான அமைப்பாகும்; இது பல்வேறு திட்டங்கள், சேவைகள் மற்றும் வளங்களை வழங்குவதன் மூலம் துறையை வளர்ப்பது, கொண்டாடுவது, அதற்காக வாதிடுவது மற்றும் அனைவரையும் இணைப்பது ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. நகரத்தின் யுக்திரீதியான தொலைநோக்குப் பார்வை மற்றும் கலாச்சாரத்திற்கான மாஸ்டர் பிளானில்

சொல்லப்பட்டுள்ள கலை, கலாச்சாரம் மற்றும் படைப்புத் தொழில்களுக்கான நகரத்தின் லட்சியம் கொண்ட தொலைநோக்குப் பார்வையை வழங்குவதில் ACCIDA ஒரு முக்கிய பங்காளியாகும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“கலை, கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் தொழில் மேம்பாட்டு நிறுவனம் ப்ராம்ப்ட்டனின் கலைச் சமூகத்துடன் இணைப்பதற்கான தனது மகத்தான பணியைத் தொடர்ந்து செய்து வருகிறது. அனைத்து குடியிருப்பாளர்களும் ஜூலை 16 அன்று கலைஞர்களுக்கான கோடைக்கால சந்தையில் எங்களுடன் இணையுமாறு ஊக்குவிக்கிறேன்.

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ஜூலை 16 அன்று தி ரோஸ் ப்ராம்ப்ட்டனில் கலைஞர்களுக்கான கோடைகால சந்தையில் எங்களுடன் இணையுங்கள்! 25 க்கும் மேற்பட்ட உள்ளூர் கலைப்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் அமைப்புகள் இருப்பதால், அனைவரும் வாங்குவதற்கு ஏதாவது ஒரு விஷயம் இருக்கும். எங்கள் உள்ளூர் கலைச் சமூகத்தை ஆதரிக்க உதவுங்கள் மற்றும் உள்ளூர் விற்பனையாளர்களிடமிருந்து பொருட்களை வாங்குங்கள். உங்களை அங்கே பார்ப்போம் என்று நம்புகிறோம்!”

*- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்; கவுன்சில் குழு உறுப்பினர், கலை, கலாச்சாரம் & படைப்பாற்றல் தொழில் மேம்பாட்டு முகமை*

“ப்ராம்ப்ட்டன் நகரம் நமது நகரத்தில் கலை மற்றும் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும், உள்ளூர் நிகழ்ச்சிகளை ஆதரிப்பதற்கும், எங்கள் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் சிறந்த கோடைகால நிகழ்வுகளை வழங்குவதற்கும் உறுதிபூண்டுள்ளது - மேலும் ACCIDA இன் கலைஞர்களுக்கான கோடைக்கால சந்தை இந்த மூன்றையும் ஒருங்கிணைக்கிறது! உள்ளூர் கலைஞர்கள் மற்றும் கலை அமைப்புகளுடன் இணைந்திடுங்கள் மற்றும் ஜூலை 16 அன்று உள்ளூர் பொருட்களை வாங்குங்கள்.”

*- பால் மோர்ரிஸன், இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக்

# Media Release

கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். [*Twitter*](https://twitter.com), [*Facebook*](https://facebook.com), மற்றும் [*Instagram*](https://instagram.com) ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.


MEDIA CONTACT

**ஊடக தொடர்புகள்**

multiculturalmedia@brampton.ca